**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மேலூர்**

**முன்னிலை: செல்வி.த.தென்றல் முத்து, L.L.M.,**

**நீதித்துறை நடுவர், மேலூர்**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30–ஆம் நாள் திங்கள்கிழமை**

**முதல் நிலை பதிவேட்டு வழக்கு எண்.4/2026**

...

ஒத்தக்கடை காவல் நிலையம்
குற்ற எண்.115/2018
பிரிவுகள் 147, 148, 294(b), 326,
341, 342, 307, 506(2) IPC .... குற்றமுறையீட்டாளர்

**//எதிரிடை//**

1) குமார், (வயது 50/2026)
த/பெ.மதுரைவீரன்,
ராஜீவ்காந்தி தெரு,
மலைச்சாமிபுரம், மதுரை மாவட்டம்.

2) பிரபாகரன், (வயது 51/2026)
த/பெ.சின்னச்சாமி,
ராஜீவ்காந்தி தெரு,
மலைச்சாமிபுரம், மதுரை மாவட்டம்.

3) விஜயகுமார், (வயது 48/2026)
த/பெ.கருப்பசாமி,
ராஜீவ்காந்தி தெரு,
மலைச்சாமிபுரம், மதுரை மாவட்டம்.

4) சோனைமுத்து, (வயது 32/2026)
த/பெ.கணேசன்,
மலைச்சாமிபுரம்,
ஒத்தக்கடை,
மதுரை மாவட்டம்.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:09:14 +0530

5) நல்லதம்பி, (வயது 58/2026)
த/பெ.காளமுத்து,
ராஜீவ்காந்தி தெரு,
மலைச்சாமிபுரம்,
மதுரை மாவட்டம்.

6) சோனைமுத்து (எ) அம்பேத்செல்வம், (வயது 41/2026)
த/பெ.தேவராஜ்,
5/38, மலைச்சாமிபுரம், ஒத்தக்கடை
மதுரை மாவட்டம். ....எதிரிகள்

இவ்வழக்கானது மேலூர், நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 11.02.2026—ம் தேதி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, PRC No.4/2026 என்ற எண் வழங்கப்பட்டு, அரசு சார்பில் அரசு உதவி வழக்கறிஞர் நிலை II அவர்கள் ஆஜராகியும், 1 முதல் 6 எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.சரவணக்குமார் அவர்கள் ஆஜராகியும், இவ்வழக்கில் ஆவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**<u>உத்தரவு</u>**

1) இவ்வழக்கின் வாதியும், வாதியின் தம்பி கோச்சா (எ) புகழேந்தி என்பவரும் யா.ஒத்தக்கடை மலைச்சாமிபுரத்தில் உள்ள மலைச்சாமி என்பவரை பார்ப்பதற்காக கடந்த 04.03.2018—ம் தேதி இரவு சுமார் 11.15 மணியளவில் மலைச்சாமிபுரம் 2—வது தெரு முருகன் கறிக்கடை அருகே சென்றபோது தனக்கு ஏற்கனவே பெயர் விலாசம் தெரிந்த மலைச்சாமிபுரத்தைச் சேர்ந்த மதுரை வீரன் மகன் குமார் என்பவர் வாதியையும், வாதியின் தம்பி புகழேந்தியையும் எதுக்குடா இந்த நேரத்தில்

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:09:32 +0530

எங்கள் ஊருக்குள் சுற்றுகிறீர்கள் என்று கேட்டதால் வாதி மற்றும் அவரது தம்பிக்கும், குமாருக்கும் பிரச்சனையாகி கைகலப்பு ஆகிவிட்டதாகவும், பின்னர் தாங்கள் அங்கிருந்தால் மலைச்சாமிபுரத்தைச் சேர்ந்தவர்கள் அடித்துவிடுவார்கள் என்று கிளம்பி தங்களது ஊருக்கு போவதற்காக மலைச்சாமிபுரம் மந்தை அருகில் இரவு சுமார் 11.30 மணியளவில் சென்றபோது தங்களுடன் தகராறு செய்த மதுரைவீரன் மகன் குமார் என்பவர் மலைச்சாமிபுரத்தைச் சேர்ந்த பிரபாகரன், விஜயகுமார், சோனைமுத்து, நல்லதம்பி, அப்பேத்செல்வம் ஆகியோர் வந்து வாதியையும், வாதியின் தம்பியையும் வழிமறித்து ஏண்டா எங்க ஏரியாவுக்கு வந்து எங்கலோடையே தகராறு பண்றீங்களாடா தேவிடியா மகன்களா என்று அசிங்கமாக பேசி நீங்க ரெண்டுபேரும் பெரிய ரவுடிகளாடா இன்னைக்கு உங்க ரெண்டு பேரையும் கொன்றால்தான்டா மலைச்சாமிபுரம் என்றாலே எல்லோருக்கும் பயம் வரும் என்று சொல்லி சோனைமுத்து, அப்பேத்செல்வம் ஆகிய இருவரும் வாதியையும், வாதியின் தம்பியையும் திமிர விடாமல் பிடித்துக்கொள்ள குமார், பிரபாகரன், விஜயகுமார், ஆகிய மூன்று பேரும் அவர்களது கைலிக்குள் மறைத்து வைத்திருந்த அருவாளை எடுத்தும் நல்லதம்பி கைலிக்குள் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்தும் வாதியையும், வாதியின் தம்பியையும் பார்த்து இத்தோடு செத்து தொலைங்கடா என்று வெட்டினார்கள் என்றும், நல்லதம்பி வாதியின் இடது பக்க விலாவில் கத்தியால் குத்தியுள்ளார் அதில் வாதிக்கு இடது கை மணிக்கட்டு வலது முழங்கைக்கு கீழ் இடது பக்க விலா ஆகிய இடங்களில் பலத்த ரத்தக்காயமும் வாதியின் தம்பி கோச்சா என்ற புகழேந்திக்கு வலது பக்க தலையில் பலத்த ரத்தக்காயமும் ஏற்பட்டுள்ளது

THENDRAAL
MUTHU
DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:09:42 +0530

பின்னர் காயம்பட்ட வாதியும், வாதியின் தம்பியும் சோனைமுத்து, அம்பேத்செல்வம் பிடியிலிருந்து சரிந்து கீழே விழுந்தவுடன் 1 முதுல் 6 எதிரிகள் நீங்கள் இன்னும் சாகவில்லையாடா என்று சொல்லி கீழே கிடந்த கற்களை எடுத்து வாதியின் மீதும் வாதியின் தம்பியின் மீதும் போட்டு காயப்படுத்தி இனிமேல் இந்த பக்கம் வந்தால் உங்களை கொன்று புதைத்து விடுவோம் என்று அவர்கள் வைத்திருந்த ஆயுதங்களை காண்பித்து கொலைமிரட்டி கொலை முயற்சி செய்த குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1, 2, 3, 5 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 341, 342, 326, 506(2), 307 இ.த.ச–ன்படியும், 4 மற்றும் 6 எதிரிகள் சட்டப்பிரிவுகள் 147, 148, 294(பி), 341, 342, 506(2), 307 இ.த.ச–ன்படியும் தண்டிக்கதக்க குற்றம் புரிந்துள்ளார்கள்.

2) இவ்வழக்கின் 1 முதல் 6 எதிரிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜரான போது அவர்களுக்கு வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் பிரிவு 230 BNSS–ன் கீழ் கட்டணமின்றி வழங்கப்பட்டது.

3) வழக்கு விசாரணையின் போது அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உண்டா? என வினவியபோது, 1 முதல் 6 எதிரிகள் "உண்டு" என்று கூறினார்கள்.

4) வழக்கு விசாரணையின் போது பிணையில் உள்ள மேற்படி 1 முதல் 6 எதிரிகள் வழக்கு விசாரணை முடியும் வரை அதே பிணையில் இருக்கவும், பிரிவு 323/362 BNSS–ன் கீழ் மதுரை, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவும் அலுவலகத்திற்கு உத்தரவிடப்படுகிறது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:09:47 +0530

5) இவ்வழக்கில் பிணையில் உள்ள 1 முதல் 6 எதிரிகள் வரும் 22.04.2026–ஆம் தேதி காலை 10.00 மணியளவில் மதுரை, மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என பிரிவு 323/362 BNSS–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 30–ம் நாள், இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

THENDRAAL MUTHU DAKSNAMOORTHY

Digitally signed by THENDRAAL MUTHU DAKSNAMOORTHY
Date: 2026.03.30 07:09:51 +0530

நீதித்துறை நடுவர்,
மேலூர்.

<u>நகல்:</u>

1) மதுரை மாவட்ட முதன்மை அமர்வு நீதிபதி அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2) அரசு குற்றத்துறை வழக்கறிஞர், மதுரை.